ஆனால் அதிலே நிர்வாக சங்கடங்கள் ஏற்படும் என்ற காரணத்தால், அல்லது அதிக நிர்வாகச் செலவு ஏற்படும் என்று கருதியோ என்னவோ மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சாராயத்திலிருந்து பெட்ரோல் தயாரிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அதற்காக இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது எல்லாம் விஞ்ஞான கூடத்திற்கு அனுப்பவேண்டிய யோசனை.

சென்னையில் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்கள்.

*719 வினா—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 15—2—1974 முடிய சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை முறையே 3,745, 842 ஆகும்.

*720 Q.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of licences for the plying of autorickshaws in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) போலீஸ் ஆணையாளரிடம் இருந்து சென்னை மாநகரில் ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கைக் குறித்து உச்சவரம்பினை 900-லிருந்து 1,150 ஆக உயர்த்த செயற்குறிப்பு வந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

1974 ஏப்ரல் 2]

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, பெட்ரோல் விலையும் அதிகமாகியிருக்கிறது, டாக்சி கட்டணமும் உயர்ந்து இருக்கிறது. ஆகவே, பயணிகளுக்கு வசதியாக இருக்க உடனே எண்ணிக்கையைக் கூட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கூடுதலாக 250 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்தச் சென்னையில் மட்டுமல்லாமல், இப்போது இருக்கும் பெட்ரோல் நெருக்கடியின் காரணமாக, மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள நடுத்தர மக்களின் வசதிக்காக ஆட்டோ அதிகப்படியாக விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, உடனடியாக ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன் வருமா ? டாக்சிக்களுக்கும் டீசல் இன்ஜின் வைக்க அரசு வசதி செய்து கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, விளைவுக்குக் காரணம் எங்கோ இருக்கிறபோது, விளைவிற்கான பரிகாரம் மட்டும் நாம் ஏன் தேடவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கிட்டத்தட்ட 3,700 டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன என்று சொன்னார்கள். டாக்சி காரில் போனால் நாம்—பாசன்ஜர்கள்—தள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, 10 ஆண்டுகள் தான் வண்டிகள் ஓடலாம், அதற்குப் பிறகு பழைய வண்டிகளுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று நமது அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய யோசனை ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்தது. ஆனால் சில இடங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலான வண்டிகளைக் கூட நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் நீலகிரி,

திருநெல்வேலி மாவட்டங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ஜீப்புகளைக் கூட நல்லமுறையில் வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அதை 'பான்' செய்வது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, வேண்டாம் என்று விடப்பட்டிருக்கிறது. ஆனால் போக்கு வரத்துத் துறையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஓடும் வண்டிகள் மறுபடியும் அனுமதி பெற வருகிறபோது, அவைகள் சரியாக இருக்கின்றனவா என்பதை சரிபார்த்த பிறகே அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று உத்தரவு ஏற்கனவே இருந்து வருகிறது.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கார் அவசியமான வாகனம் இல்லை என்று சொன்னார்கள். எம்.எல்.ஏ.-க்கள் டாக்சியில் செல்வதற்காவது கட்டணச் சலுகைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சலுகைக்கான பட்டியலில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவசரப் பட்டு வந்து விடக்கூடாது.

திரு. என். டென்னிஸ்: சார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு லைசன்சு வழங்கும்போது, கமர்சியல் ஆஸ்பெக்ட்டில் லைசன்சு கேட்பவர்களுக்கு வழங்கப்படுவதை விட, தனிப்பட்டவர்களுக்கு லைசென்சு வழங்குவதை விட, செல்ப்-கோவாபரேடிவ் அடிப் படையில் கேட்பவர்களுக்கு லைசென்சு வழங்குவதற்கு அரசாங்கம் ப்ரிஃபரன்சு கொடுக்குமா? அதோடு ஹைதராபாத், பெங்களூர் போன்ற இடங்களில் 'நாய்ஸ்லெஸ்' ஆட்டோ ரிக்ஷாக் கள் ஓடுகின்றன. அம்மாதிரி இங்கே கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, டிரைவர்களே கேட்டால், ஓட்டுநர்களே கேட்டால், அவர்களுக்குத் தான் முதலிடம் தரவேண்டுமென்று நம்முடைய விதிமுறைகளில் சொல்லி இருக்கிறோம். ஆனால் கெட்டிக்கார சில உரிமையாளர்கள் டிரைவர்கள் பேரிலே கேட்டு 4-5 வண்டிகளுக்குக் கூட லைசென்சு வாங்கிவிடுகிறார்கள். அவற்றையும் காவல் துறையிடம் சொல்லி, அப்படி ஏதாவது இருக்குமானால் அந்த லைசென்சை ரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் ஏற்கனவே காவல் துறைக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

1974 ஏப்ரல் 2]

சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் ஹைதராபாத்திலும், பெங்களூரிலும் ஓடுவதாகச் சொன்னார்கள். சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாவை நான் ஹைதராபாத்தில் பார்த்தது இல்லை. பெங்களூரில் போடும் சத்தம் சென்னைவரை கேட்கிறது.

காலணிகள் உற்பத்தி நிலையம், மப்பேடு

*721 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊதிய உயர்வு, தனி ஈட்டுப்படி போன்ற சில கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும்படி கேட்டு, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மப்பேடு அரசினர் காலணிகள் உற்பத்தி நிலையத் தொழிலாளரிடமிருந்து இவ்வாண்டு, பிரப்ரவரி, மார்ச்சு மாதங்களில், அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரம் யாது?

(உ) கோரிக்கைகள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) ஆம்.

(இ) (1) நாட்கூலியை ஐந்து ரூபாயாக உயர்த்துதல்,

(2) இரண்டாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி தனி ஈட்டுப்படி வழங்குதல்.

(3) பண்டிகை முன் பணம் வாங்குதல்.

(4) அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் பஞ்சப்படி வழங்குதல்.

(5) ஆண்டு ஒன்றிற்கு 12 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்குதல்.

இந்த நிலையம் ஆரம்பத்திலிருந்து நஷ்டத்திலேயே இருந்ததால் மூடப்பட்டுவிட்டது. அதனால் தொழிலாளர்களின் கோரிக்கைகளை கவனித்து ஆவன செய்ய தற்சமயம் வாய்ப்பு இல்லை.